RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

# இராஜம்கிருஷ்ணனின் 'தனிமை' சிறுகதையில் பெண்ணியச் சிந்தனை

ஆ. பாக்கியலட்சுமி [அ, *]

[அ] தமிழ்த்துறை, ஜெயா கலை மற்றும் அறிவியல் கல்லூரி, திருநின்றவூர்,

# Feminist Thoughts in Rajam Krishnan's Short story 'Thanimai'

A. Bagiyalakshmi [a, *]

[a] Department of Tamil, Jaya college of Arts and Science, Thirunindravur

*Corresponding Author:

Received: 02-12-2025
Revised: 27-02-2026
Accepted: 10-03-2026
Published: 17-03-2026

Check for updates

**ABSTRACT**

This story functions as a significant socio-cultural document that critically exposes the persistence of patriarchal practices in contemporary society. By depicting the denial of a woman's right to perform the final rites for her own father, the narrative foregrounds the deeply entrenched gender hierarchies that continue to regulate ritual authority and familial roles. The text thus moves beyond individual suffering to reveal a broader social structure that normalizes exclusion under the guise of tradition. In doing so, the story compels a re-examination of cultural customs that perpetuate gender discrimination, demonstrating how such oppressive norms remain resilient and operational even in the present day.

**Keywords:** Patriarchy, Politics of the Female, Reletionship, Dynamics, Ritual and Tradition

## முன்னுரை

இலக்கியம் என்பது மனித வாழ்க்கையின் பிரதிபலிப்பு. குறிப்பாக இச்சமூகத்தில் ஒடுக்கப்பட்டவர்களின் குரலாக இலக்கியம் செயல்படும் போது, அது வெறும் கலையின் வடிவமாக மட்டுமல்லாமல், சமூக மாற்றத்திற்கான கருவியாகவும் மாறுகிறது. இத்தகைய இலக்கியப் பண்பைக் கொண்டதாகத் 'தனிமை' சிறுகதை அமைந்துள்ளது. இக்கதை, பெண்ணின் வாழ்வில் நிலவும் ஆணாதிக்கச் சடங்குகள், சமூக அநீதி, உரிமை மறுப்பு, மனத்தனிமை ஆகியவற்றை நுணுக்கமாக வெளிப்படுத்துகிறது.

'தனிமை' சிறுகதையின் மையக் கருத்தை ஆராய்தல், பெண் உரிமை மறுப்பு சமூக கட்டமைப்பை விளக்குதல், ஆணாதிக்கச் சடங்குகளின் தாக்கத்தை வெளிப்படுத்துதல், தனிமை என்ற கருத்தின் பல பரிமாணங்களை ஆராய்தல், பெண்ணிய இலக்கியப் பார்வையில் கதையை மதிப்பீடு செய்தல் ஆகியவற்றை ஆய்ந்துரைப்பதே இவ்ஆய்வுக்கட்டுரையின் நோக்காம்.

## கதைப்பின்னல்

'தனிமை' சிறுகதை கணவரை இழந்த பிரேமா என்ற பெண்ணின் வாழ்வை மையமாகக் கொண்டு நகர்கிறது. கணவர் மரணத்திற்குப் பின், மகள்கள் கல்வி மற்றும் வேலை காரணமாக வெளிநாடுகளுக்குச் சென்று விடுகின்றனர். உடல் ரீதியாக அவள் தனியாக இருந்தாலும், உண்மையான தனிமை அவளைச் சூழ்வது சமூகத்தால் மட்டுமே. கணவரின் இறுதிச் சடங்கின்போது, 'பெண்ணுக்குக் கொள்ளி வைக்கும் உரிமை இல்லை' என்ற காரணத்தால், அவளது மகள்கள் ஒதுக்கப்படுகிறார்கள். குறிப்பாக ரஜனி, இந்த அநீதிக்கு எதிராகக் குரல் கொடுத்தாலும், சமூக அழுத்தங்களால் அடக்கப்படுகிறாள். இதனால் அவள் நாட்டை விட்டு விலகிச் செல்கிறாள். இவ்வாறு, பெண்கள் உரிமைக்காகப் போராடினால் தனிமைப்படுத்தப்படுகிறார்கள் என்பதே கதையின் கருவாக அமைந்துள்ளது. "பெண் சமூகத்தில் விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகளை எதிர்த்து தன் உரிமையை

வெளிப்படுத்தும் போக்கு நவீன இலக்கியங்களில் வலுப்பெறுகிறது."[1] என்னும் இரா. மீனாட்சியின் கருத்திற்கு இக்கதை வலுசேர்ப்பதாய் அமைந்துள்ளது.

## 'தனிமை' - தலைப்பின் பொருத்தம்

'தனிமை' என்பது இக்கதையில் உடல் தனிமையை மட்டும் குறிக்கவில்லை. கணவர் உயிரிழந்தபின் பிரேமாவின் சமூகத் தனிமை, பெண் என்பதற்காக இறுதி உரிமை மறுக்கப்பட்ட மனத் தனிமை, ரஜனி போன்ற துணிவான பெண்ணின் எதிர்ப்பு சமூகத்தால் நிராகரிக்கப்படுவதால் ஏற்படும் தனிமை, கீதா போன்ற குழந்தைகளுக்குக் கூட சமூகப் பாகுபாட்டால் உருவாகும் உளவியல் தனிமை எனப் பல நிலைகளில் தனிமை விரிகிறது. ஆகவே, தலைப்பு கதையின் உள்ளார்ந்த பொருளை முழுமையாக வெளிப்படுத்துவதாய்த் தலைப்பு அமைத்திருப்பது கதாசிரியர் இராஜம்கிருஷ்ணனின் நுண்மான் நுழைபுலத்தைக் காட்டுவதாய் அமைந்துள்ளது.

## பெண்ணுக்கு மறுக்கப்படும் இறுதிச் சடங்கு உரிமை

இக்கதையின் உச்சப் புள்ளி, 'பெற்ற தகப்பனுக்கு அந்திமம் செய்யப் பெண்ணுக்கு உரிமை இல்லை' என்ற சமூக விதி. இது ஒரு மத நம்பிக்கையாக மட்டும் இல்லாமல், ஆணாதிக்க அதிகாரக் கட்டமைப்பாக உள்ளதை இக்கதை வெளிப்படுத்துகிறது. பெண் தனக்கு உயிர் தந்த தந்தைக்கே இறுதி மரியாதை செய்யத் தகுதியற்றவளாகக் கருதப்படுவதும், பெண்ணின் உணர்வுகள், உறவுகள், கடமை உணர்வுகள் மதிக்கப்படுவதில்லை என்பதனையும் தனிமை சிறுகதை எடுத்துரைக்கிறது.

சடங்கு என்பது மனிதத்தைவிட மேலானதாக மாற்றப்பட்டுள்ளது. இந்த நிலை, பெண்ணின் மனித உரிமைகளை முற்றிலும் மறுக்கும் சமூகச் சிந்தனையை வெளிச்சம் போட்டுக் காட்டிநிற்கிறது. இக்கதைக் கருத்து, "பெண்ணுக்கான உடல், உறவு, சடங்கு சார்ந்த உரிமைகள் மறுக்கப்பட்டதன் விளைவாக அவள் போராட்டம் இலக்கியத்தில் பதிவாகிறது."[2] என்னும் க.பஞ்சாங்கத்தின் கூற்றுவழி மெய்ப்பிக்கப்படுகிறது.

## ரஜனி - எதிர்ப்பின் குரல்

ரஜனி பாத்திரப்படைப்பினூடே பாரம்பரிய பெண் உருவத்திலிருந்து மாறுபட்டுள்ளதாய் படைக்கப்பட்டுள்ளது. அதனை,

"எண்டி! எங்கோ கண்காணாத இடத்தில் கோரமா உசிரை விட்டிருக்கிறான். அவன் நல்ல கதி அடைய வேண்டாமா நல்ல வேளை, சோமு வந்திட்டான் சோமு, சீக்கிரமாக் குளிச்சிட்டு வாப்பா! புரோகிதர் வந்து காத்திருக்கிறார்" என்று அத்தை கூறியதையும், சிகரெட் வாடையும் சிவந்த கண்களும் மீசையும் கிருதாவுமாக வந்த அவள் முதல் பிள்ளை அந்திமக்கிரியை செய்யத் தயாராகச் சென்றதையும் பார்த்துக் கொண்டிருந்த ரஜனி வெறிக் கொண்டு கூச்சல் போட்டாள்.

"என்னம்மா? இவங்க, எங்கப்பாவுக்கு யாரு? அவருக்குக் கிரியை செய்ய இவங்களுக்கு என்ன தகுதி இருக்கு? ராத்திரி பார்ல குடிச்சிட்டு இப்ப கிரியை பண்ண வாரான்!" அவள் வெறிக் கத்தல் அங்கே ஒரு பூகம்பத்தையே நிகழ்த்தப் போதுமானதாக இருந்தது."[3] என்று இராஜம்கிருஷ்ணன் படைத்துள்ளார்.

ரஜனி கல்வியறிவு பெற்றவள், துணிச்சலானவள், சுயமரியாதை கொண்டவள், சமூக அநீதியை எதிர்க்கும் குரல் படைத்தவள் எனப் பன்முகப்பரிணாமம் உள்ளவளாகக் காட்டப்படுகிறாள். ஆனால், இவ்வளவு தகுதிகள் இருந்தும், அவள் "பெண்" என்பதற்காக ஒடுக்கப்படுகிறாள். இதன் மூலம், பெண்ணின் கல்வியும் திறமையும் கூட சமூகத்தில் தடையாக மாறும் நிலை விமர்சிக்கப்படுகிறது.

## பிரேமா - சமூக அழுத்தங்களின் பிரதிநிதி

பிரேமாவைச் சமூக அவலங்களின் பிரதிநிதியாகப் படைத்துக் காட்டியுள்ளார் இராஜம்கிருஷ்ணன். சமூக அடக்குமுறையை அக்கதையில்,

"ஏண்டி? என்னடி சொன்ன? பெண்ணாய்ப் பிறந்தவ அடக்கமா இருக்கணும். ஒருத்தங்கிட்ட வாழ்ந்து பேரெடுக்கணும்."

"நீ சொல்ல வேண்டாம்! உன் பிள்ளைக்கு நான் கழுத்தை நீட்டுவேன்னு கனவு காணாதே!"

"பிரேமா! இது கொஞ்சங்கூட சரியா இல்ல. உன் பெண்களை இப்படி அடக்கமில்லாம வளத்திருக்கே. அதுக வாயை மூடச் சொல்லிட்டு நடக்கிற காரியத்தைப் பாரு!

"என்ன, என்ன நடக்கிற காரியம்? உன் பிள்ளைகள் ரெண்டு பேரும் அப்பா சேத்துவெச்ச பிஸினஸ்காக, பணம் எல்லாம் குடியிலும் சூதிலும் தொலைச்சிட்டு இந்த உறவைப் புடிச்சிக்கணும்னு பாக்கறாங்க"

பிரேமா திகிலுடன், "ரஜனி, இந்தச் சமயத்தில் வேண்டாம்மா?" என்று கெஞ்சினாலும் அவள் அடங்கவில்லை.

"பாருடி! அப்பாவுக்கு இவ செய்யும் மரியாதையா? ஏற்கெனவே மூணு நாளாகுது. ரகள பண்ணாம போ! பொண்ணாப் பிறந்துட்டு... ரஜனி பாய்ந்து வந்து அத்தையை வெறியுடன் தள்ள, அப்போதுதான் படியேறி வந்த அவள் மகன் சோமு, ரஜனி கத்தக் கத்த ஓர் அறையில் அவளைத் தள்ளிச் சாத்தினான். அவள் கதவை உடைத்தாள். கத்தினாள். பிறகு நடந்ததை அவளால் இன்னமும் சீரணிக்க முடியவில்லை. ஒரு மருத்துவரைக் கூட்டி வந்து அவளுக்கு காம்போஸ்' ஊசிபோட்டு அடங்கவைத்து விட்டு, அன்றைய ஈமக் கடன்களை அவன் செய்தான். அவன் கொள்ளி வைத்ததையே புரோகிதரும் ஏற்றார். கணவரின் சடலம் கிடக்கையில், நான்கு பேர் முன், பிரேமா ஆண் மக்களைப் பெற்றிருக்கவில்லை என்று அவமானப்படுத்தப்பட்டாள்.

ஒரு பையன் கொள்ளி போட்டாலும், மற்றவன் மருமகனாகும் உரிமையைப் பெற்று விடவேண்டும் என்பது அவர்கள் திட்டம். ஆனால், ரஜனி மயக்கந்தெளிந்து எழுந்ததும், நடந்ததை அறிந்தபின், தாயைத்தான். அவர்களின் இந்தத் துணிவுக்கு இடம் கொடுத்தற்காகக் கடிந்து கொண்டாள். கடித்துத் துப்பினாள்."[4] என்ற உரையாடல்கள்வழி புலப்படுகிறது.

நா. வானமாமலை கூறும் "சமூகம் பெண்ணை உறவின் மையமாகக் கொண்டாலும், அதிகார உரிமைகளை வழங்க மறுக்கிறது."[5] என்னும் கூற்று அரண்சேர்ப்பதாய் அமைந்துள்ளது.

அவள் சமூகத்தால் பாதிக்கப்பட்டப் பெண்ணாகவும் சமூகப் பழிச்சொல்லுக்குப் பயப்படுபவள் அல்லது எதிர்க்கத் துணிவில்லாதவளாகவும், துணிவின்மைக்குக் காரணம் மகள்களின் பாதுகாப்புக்காகப் பிரேமா மௌனம் காக்கிறாள் என்பதாகவும் அந்த மௌனமே அநீதிக்கு இடம் கொடுப்பதாகவும் கதைப்பின்னலும் பாத்திரப்படைப்பும் பின்னப்பட்டுள்ளது. பிரேமா பாத்திரப் படைப்பின்வழி, பெண்களை அடக்கும் சமூக அமைப்பில், பெண்களே எவ்வாறு கருவியாக மாறுகிறார்கள் என்பதை இக்கதை புலப்படுத்துகிறது.

## கீதா - கதையின் மனசாட்சி

கீதா குழந்தையாக இருந்தாலும், கதையின் மனசாட்சியாக இப்பாத்திரப் படைப்பு படைக்கப்பட்டுள்ளது. பெண் என்ற காரணத்தால் சமூகத்தில் ஏற்படும் பாகுபாட்டை உணர்த்துபவளாகவும் "பெண்ணுன்னா ஏன் மட்டமாப் பாக்குறாங்கள்?"[6] என்ற கதாசிரியரின் கேள்வி அப்பாத்திரப்படைப்பின்வழி கேட்கப்படுவதாய் அமைந்துள்ளது. இந்தக் கேள்வி வாசகரின் மனத்தையும் உலுக்குவதாய் அமைந்துள்ளது.

## பெண்ணிய இலக்கியப் பார்வை

பெண்ணியக் கோட்பாட்டின் அடிப்படையில் நோக்கினால், இக்கதையில் பெண்ணின் வாழ்க்கை முழுவதும் ஆணாதிக்கச் சமூகக் கட்டுப்பாடுகளால் நிர்ணயிக்கப்படுவது தெளிவாக வெளிப்படுகிறது. பெண்ணின் உடல் அவளுடையதல்ல; அது குடும்பம், சமூகம், சடங்கு, மரபு ஆகியவற்றின் அதிகாரத்திற்கு உட்படுத்தப்படுகிறது. உறவுகளிலும் அவளுக்குத் தனித்த முடிவு உரிமை வழங்கப்படாமல், ஆணின் விருப்பமே நியாயமாக்கப்படுகிறது. இத்தகைய கட்டுப்பாடுகளுக்கு எதிராக பெண் குரல் எழுப்பும் போதே, அவள் 'சமூக விரோதியாக', 'ஒழுங்கு குலைப்பவளாகச்' சித்தரிக்கப்படுகிறாள். இதன் மூலம் எதிர்ப்பே குற்றமாக மாற்றப்படும் ஆணாதிக்க உளவியல் வெளிக்காட்டப்படுகிறது.

பெண்ணின் தனிமை இயல்பான ஒன்றாக அல்ல; சமூகத்தால் திட்டமிட்டு உருவாக்கப்படும் விதியாகக் கதையில் கட்டமைக்கப்பட்டுள்ளது. உறவுகளின் நடுவிலும் ஆதரவற்ற நிலைக்கு தள்ளப்படும் பெண், தனிமையையே தனது நிரந்தர அடையாளமாக ஏற்க வேண்டிய சூழல் உருவாக்கப்படுகிறது. இவ்வாறு, பெண்ணின் உடல், மனம், வாழ்வு ஆகிய அனைத்திலும் செயல்படும் ஆணாதிக்க அடக்குமுறைகளை இக்கதையில் தெளிவாகவும் நுட்பமாகவும் இராஜம்கிருஷ்ணன் பதிவுசெய்துள்ளார். இக்கருத்தினை, "பெண்ணின் தனிமை என்பது தனிப்பட்ட பிரச்சினையல்ல; அது சமூகக் கட்டமைப்பின் விளைவு."[7] என்று முனைவர் சு.ஜெயசங்கர் கூறும் கூற்று பொருந்துவதாய் அமைந்துள்ளது.

## சமூக மாற்றத்திற்கான வித்து

'தனிமை' சிறுகதை, வெறும் சோகக் கதை அல்ல. ஒரு பெண்ணைத் தன் தந்தைக்கு ஈமக்கடன் செய்வதைத் தடுப்பது ஒரு நிகழ்வல்ல, பெண்ணுரிமையைப் பறிக்கச் சமுதாயம் கையிலெடுத்திருக்கும் ஓர் ஆயுதமே. ரஜனியின் குரலாக ஒலிப்பது ஓர் எதிர்ப்புக் குரல் மட்டுமன்றி ஒரு சமூக விழிப்புணர்வு ஆவணம் எனலாம். பெண்ணைக் கருணைக்குரியவளாக அல்ல. தைரியமான மனிதராக, உரிமைக்குரிய நபராகப் பார்க்க வேண்டும் என்ற அழைப்பாக இக்கதை அமைந்துள்ளது.

## இலக்கியப்பயன்

இக்கதைக்கருவைத் தழுவிய சமூகக்கொடுமையைச் சமூகம் முழுமையாக களையவில்லையாயினும் இச்சமுதாயத்தில் "பெற்ற தந்தைக்கு அந்திமச் சடங்கு செய்த மகள்கள் சமூக மரபுகளை உடைத்துள்ளனர்."[8] என்ற தலைப்பிட்ட செய்தி இலக்கியங்கள் சமூக மாற்றத்திற்கு வித்திடும் என்ற கூற்று உண்மைப்புலப்பாடுடையதாம்.

## முடிவுரை

'தனிமை' சிறுகதை, பெண்ணின் வாழ்வில் நிலவும் சமூக அநீதிகளை வெளிப்படுத்தும் வலுவான இலக்கிய ஆவணம். பெண்ணுக்கு இறுதிச் சடங்குகளில்கூட உரிமை மறுக்கப்படும் நிலை, சமூகத்தின் மனிதநேயக் குறைபாட்டை வெளிச்சமிட்டுக் காட்டுகிறது. தனிமை என்பது பெண்ணின் பலவீனம் அல்ல; சமூகத்தின் தோல்வி என்பதை இக்கதை உறுதியாக நிறுவுகிறது.

## References

Jayasangar.S, Thamizh Ilakkiyangalil Samuga Kattamaippu, Meenakshi Book Store, Madurai, 2012.

Meenakshi. R, Pen Ezhuthum Penniyamum, New Chendury Book House, Chennai, 2005.

Panjangam. K, Sanga Ilakkiyathil Penniyam, Thamizhini Publication, 2010.

Rajam Krishnan, Rajam Krishanan Sirukathaigal, Gowra Publication, Triblecane, Chennai, 2016.

Vanamaamalai. N, Thamizhar Panpadum Samuga Matramum, Tamil Nadu Govt Publishaers, Chennai, 1998.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2026. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License